# நிலுவையில் உள்ள பற்றுகளை முழுவதுமாகவும் இறுதியாகவும் தீர்த்துக் கொள்ள ஒப்பப்புள்ளிகளை கோருதல் - திருத்தம்

# CORRIGENDUM - INVITATION FOR BIDS FOR FULL AND FINAL SETTLEMENT OF THE OUTSTANDING DEBT

கோஸ்ட்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட் **(நிறுவனம்),** தற்போது தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் 1200 MW (2x600 மெகாவாட்) நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையத்தை **(செயல்திட்டம்)** இயக்கி வருகிறது.

இந்த நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சரி செய்வதற்காக, பாரத ஸ்டேட் வங்கியின் **(SBI)** தலைமையிலான கடன் வழங்கியோர் கூட்டமைப்பானது **(கடன் வழங்கியோர்)** கடன் வழங்கியவர்களுக்கு இந்த நிறுவனம் அடைக்க வேண்டிய அனைத்து கடப்பாடுகளுக்கும் உரிய முழுவதுமான மற்றும் இறுதியான முறையில் தீர்க்க ஏதுவாக, ஒப்பப்புள்ளிகளைக் கோருகிற போட்டி ஒப்பப்புள்ளி நடைமுறையை **(ஒப்பப்புள்ளி நடைமுறை)** பின்வருவனவற்றுக்காக மேற்கொள்ள முடிவு செய்தது.

(i) நிறுவனமானது கடன் வழங்கியோரிடமிருந்து பெற்றுள்ள பற்று அடிப்படையிலான நிதி (fund based debt) தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளை முழுவதுமாகவும் இறுதியாகவும் தீர்த்துக் கொள்ள ஏதுவாக நிறுவனத்தின் 51% சமவீத பங்கினை கையகப்படுத்திக் கொள்ளுதல். மேற்குறிப்பிட்ட கையகப்படுத்தல் மற்றும் தீர்த்தலுக்கான விலைப்புள்ளி (offer) இந்திய ரூபாய் 3,000 கோடிக்கு குறைவானதாக இருத்தல் கூடாது இதில் கடன் வழங்கியோருக்கான நிறுவனத்தின் குறைந்தபட்சம் 15% சமவீத பங்கும் **(கையகப்படுத்தப்படுவதன் பேரில்)** அடங்கும்.

(ii) நிறுவனத்தால் பெறப்பட்டுள்ள நிதி அல்லாதவை அடிப்படையிலான பற்று (non fund based debt) தொடர்பான அனைத்து நிலுவை தொகைகளை முழுவதுமாகவும் இறுதியாகவும் தீர்த்துக் கொள்ளுதல். இது தொடர்பாக, கடன் வழங்கியோருக்கு ஒப்பப்புள்ளி நடைமுறை குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் உறுதுணை புரியவும் ஆலோசனை கூறவும் கடன் வழங்கியோர், எஸ்பிஐ கேப்பிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட் **("SBICAPS")** - ஐ நியமனம் செய்துள்ளார்கள்.

அதற்கு இணங்க, SBICAPS, மற்றும் SBI, கடன் வழங்கியவர்களின் சார்பில் இந்த ஒப்பப்புள்ளி நடைமுறையில் பங்கேற்க போதுமான ஆதாரங்களைத் தங்கள் வசம் கொண்டுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து /முதலீட்டாளர்கள் கூட்டமைப்பிடமிருந்து **(பங்கேற்பாளர்கள்)** உத்தேச திட்ட வரைவுகளை **(ஒவ்வொன்றும் ஒரு ஒப்பப்புள்ளி)** வரவேற்கும் விளம்பரங்களை **(விளம்பரம்)** **ஜனவரி 25, 2019** அன்று வெளியிட்டது.

தகுதி வரம்பு ஆவணம் மற்றும் பகிரங்கப்படுத்தக் கூடாத உடன்படிக்கை ஆகியவை நிறுவனம் பற்றிய சிறு விவர குறிப்புரை உடன் கூடியதாக இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. **(www.sbi.co.in** மற்றும் **https://sbicaps.com/index.php/whats-new)**

ஒப்பப்புள்ளி நடைமுறை மற்றும் விளம்பரத்தின் பகுதி மாறுபாடு காரணமாக, விருப்பமுள்ள அனைவரும் பின்வரும் விவரத்தை கவனத்தில் கொள்ளவும். ஒப்பப்புள்ளி சமர்ப்பித்தல் தேதி /நேரம் - **பிப்ரவரி 15, 2019 அன்று மதியம் 2.00 மணி என்பது மார்ச் 02, 2019 அன்று மதியம் 2.00 மணி** என்பதாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒப்பப்புள்ளி நடைமுறை குறித்த அனைத்து அண்மை தகவல், மாறுபாடு, மாற்றம், திருத்தம் கியவை பற்றி அறிய அவ்வப்போது பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும் **(https://www.sbicaps.com /index.php/whats-new** அல்லது **www.sbi.co.in).**

ஏதேனும் ஐயப்பாடுகளுக்கு பின்வரும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும்

தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரிகள் தொலைபேசி எண்.....

| தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | தொலைபேசி எண் | மின்னஞ்சல் |
|---|---|---|
| திரு. பவானி சங்கரன் அவர்கள் (AGM, SBI) | +91 22 2217 7540 | agm1infra1.sarg@sbi.co.in |
| திருமதி. ராஜ்ராஜேஸ்வரி மிஸ்ரா அவர்கள் (VP, SBICAPS) | +91 22 2217 8313 | rajrajeswari.mishra@sbicaps.com |

SBI

SBI Capital Markets Limited

குறிப்பு: இந்த விளம்பரம், எஸ்பிஐ கேப்ஸ் அல்லது கடன் கொடுத்தவர்களின் சார்பாக எந்தவிதமான உறுதிமொழி ஆகாது மற்றும் உறுதிமொழியாக கருதப்படாது. எஸ்பிஐ கேப்ஸ் மற்றும் கடன் கொடுத்தவர்களுக்கு, செயல்முறையிலிருந்தும் அல்லது அதன் எந்தவொரு பகுதியிலிருந்தும் விலகிக் கொள்ளும் / தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் / ரத்து செய்யும், செயல்முறையின் எந்த கட்டத்திலும் எந்தவொரு/ அனைத்து விண்ணப்பத்தை (விண்ணப்பங்களை) பெற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் மற்றும்/அல்லது செயல்முறையை அல்லது அதன் எந்த பகுதியையும் மாற்றியமைக்கும் அல்லது எந்தவொரு விதியையும் எந்தவொரு காரணமுமின்றி, எந்தவித கட்டுபாடுமின்றி மாற்றும் உரிமை உள்ளது. இது ஒரு ஆஃபர் டாகுமென்ட் அல்ல. இந்த விளம்பரம், ஒப்பப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிமைத் துறப்புகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டது.